


# பின்டக்கிங் ஃபுட்

**இந்தபாடத்திலே, உஷா ஜெனோம் பின்டக்கிங் ஃபுட்-ஐ யூஸ் பண்றது பத்தி கத்துக்கலாம்.**












கார்மெண்ட் -க்கு, சாஃப்ட் ஆன டெலிகேட் ஆன, மடிப்பைக்கொடுக்கற இந்த பின்டக்ஸ் எப்படி ஒரே சீரா செய்யப்படுதுன்னு, நீங்க ஆச்சரியப்பட்டு இருக்கீங்களா ?அது எப்படி சுலபமா செய்யப்படுதுன்னு, இந்த பாடத்திலே உங்களுக்கு காட்டறோம்.

இன்னும் நீங்க கெஸ் பண்ணலேன்னா, இந்தப்பாடத்திலே, உஷா ஜெனோம் பின்டக்கிங் ஃபுட்-ஐ யூஸ் பண்றது பத்தி கத்துக்கலாம்.இந்த ஃபுட் பின்டக்ஸ், பேரலல் லைன்ஸ்- ஐ, சீரான இடைவெளியிலே , கிரியேட் பண்ண உதவும்.

இந்த ஃபுட் உதவியாலே, சிம்பிள் பின்டக்ஸ் -ஐயும், கார்டட் பின்டக்ஸ் -ஐயும், கிரியேட் பண்ணலாம்.

இந்தபாடத்துக்கு, உங்களுக்கு,தேவையானது-- உஷா ஜெனோம் பின்டக்கிங் ஃபுட், ட்வின் நீடில், காட்டன் கார்ட் நம்பர் .250, 8-க்கு 8-அங்குல சதுரமான துணி, விருப்பமான கலர் நூல், ஃபேப்ரிக் மார்க்கர், ஸ்கேல், சின்ன கத்தரிக்கோல்.

முதல்லே, ஒரு துணியிலே, 3- அங்குல இடைவெளியிலே,ரெண்டு பேரலல் லைன்ஸ் வரைஞ்சுக்கலாம்.

கோடு நீளத்துக்கு ஒரு கயிற்றை எடுத்து, கொஞ்சம் அதிகமாவே விட்டு கட் பண்ணிக்கலாம்.





இது தான் பின்டக்கிங் ஃபுட். இந்த ஃபுட்-க்கு கீழே, நிறைய க்ரூவ்ஸ் இருக்கறதைப் பாருங்க. இதனாலே, ரெண்டு லைன் பின்டக்ஸ் , கிரியேட் பண்ண முடியும்.அதே சமயம்,அதுங்களுக்கு இடையிலே சமமான டிஸ்டன்ஸ்-ஐ, மெயின்டெயின் பண்ண முடியும்.



முதல்லே, ட்வின் நீடில்-ஐ பார்க்கலாம்.இது ரெண்டு நீளமான நீடில் மாதிரி இருக்கு.ஒரு ஹெட், ரெண்டு கூர்மையான எக்ஸ்டென்ஷன்ஸ், அதிலே துவாரம், இருக்கு. இதை அட்டாச் பண்ணும் போது, ஹெட்-னுடைய தட்டையான பக்கம் ,உங்களைப் பார்க்காது. ரவுண்ட் சைட் தான் உங்களைப்பார்த்த மாதிரி இருக்கும்.இதை கவனமா பாருங்க.

நீடில் க்ளாம்ப் ஸ்க்ரூ-வை லூஸ் பண்ணி, நீடில்-ஐ, கீழே இழுத்துட்டு, ரவுண்ட் சைட், உங்க பக்கம் இருக்கிற மாதிரி, ட்வின் நீடில்-ஐ, உள்ளே இன்செர்ட் பண்ணுங்க. டைட்-ஆ, ஸ்க்ரூ பண்ணிடுங்க.





நார்மல் ப்ரெஸ்ஸர் ஃபுட் -ஐ எடுத்திட்டு, பின்டக்கிங் ஃபுட்-ஐ வையுங்க.


இப்போ ட்வின் நீடில்-க்கு நூல் கொண்டுவரணும்.ரெண்டு கலர் நூலை எடுத்துக்கலாம்.ரெண்டு ஸ்பூல் பின்ஸ்-ஐ மேலே தூக்கி, ஒவ்வொண்ணுலேயும் ஒரு நூல்கண்டை வைக்கணும்.அடுத்து, ரெண்டு நூலையும் சேர்த்து, கைட்ஸ் வழியா,மெஷினுக்கு கொண்டுவரணும்.ஊசி துவாரம் கிட்டே வரும் போது,அதை பிரிச்சு,ஒண்ணை இடது பக்கம் இருக்கிற ஹூக் வழியா கொண்டு வரணும்,--நான் இப்போ பண்ற மாதிரி.இன்னொண்ணை, வலப்பக்க ஹூக் வழியா கொண்டுவரணும். நூல் முனையை கட் பண்ணிட்டு, ஒவ்வொரு நீடில்துவாரத்திலேயும் ஒவ்வொரு நூலை கோக்கணும்.




பின்டக்ஸ் பண்றதுக்கு, இப்போ உங்க மெஷின் ரெடி.அடுத்து, நடுவிலே இருக்கிற க்ரூவ்-ஐ, துணியிலே வரைஞ்ச கோட்டுக்கு சமமா அலைன் பண்ணனும்.அப்புறம், ப்ரெஸ்ஸர்ஃபுட்-ஐ, கீழே இறக்கணும்.




இப்போ,மெஷின் செட்டிங்க்ஸ்-ஐ, அட்ஜஸ்ட் பண்ணுங்க. த்ரெட் டென்ஷன் ஐ இந்த மாதிரி மாக்ஸிமம்-க்கு கொண்டு வாங்க. பேட்டர்ன் செலக்டர்-லே, ஸ்ட்ரெயிட் ஸ்டிச் A-வை, செட் பண்ணுங்க. ஸ்டிச் லெந்த் -ஐ, 2-லே, அட்ஜஸ்ட் பண்ணுங்க.



துணியை அதுக்கு ஏத்த மாதிரி வெச்சு அலைன் பண்ணி,மெதுவா தைக்க ஆரம்பிக்கணும்.
இதெல்லாம் சிம்பிள் பின்டக்ஸ் .
3-D - மாதிரியான எஃபெக்ட் வரணும்-னா, கார்டட் பின்டக்-ஐ தைக்கறது பத்தி கத்துக்கணும்.
இதிலே, கூட ஒரு ஸ்டெப் இருக்கு.அதிலே, கயிற்றை, துணிக்கு கீழே வைக்கணும்.துணியிலே இன்னொரு லைன் வரைஞ்சோம், இல்லையா அதுக்கு அலைன் பண்ணி, வைக்கணும்
துணியை, ஃபுட்-க்கு கீழே வைக்கும் போது,கயிற்றை நல்லா பிடிச்சுக்கணும், ஃபுட்-னுடைய நடுவிலே அது வரணும்-ங்கறதை, உறுதிபடுத்திக்கணும்.
துணி முடியற வரைக்கும், மெதுவா,தைக்க ஆரம்பியுங்க.
தைச்சு முடிச்சாச்சுன்னா,அதிகப்படியான நூலையும், கயிற்றையும் கட் பண்ணிடுங்க.கயிறு, ஆட்டோமடிக்-ஆ, துணி பின்னாலே அட்டாச் ஆயிடும்.
சரியா பண்ணீங்க. வெவ்வேற க்ரூவ்ஸ்-ஐ, பயன்படுத்தி,வெவ்வேற டிஸ்டன்ஸ் இருக்கிற, ரெண்டு டைப் பின்டக்ஸ் -ஐ, க்ரியேட் பண்றது பத்தி தெரிஞ்சுகிட்டீங்க.கயிறு அட்டாச் பண்ணி பின்டக்ஸ் க்ரியேட் பண்றதையும் கத்துகிட்டீங்க.
பின்டக்ஸ் பிரமாதமானது. இணைகோடுகளாக, அல்லது வளைகோடுகளாக, அற்புதமான ஆர்டிஸ்டிக் எஃபெக்ட் கொடுக்க, பின்டக்ஸ் -ஐ, நீங்க பயன்படுத்தலாம். ப்ளையின் துணியிலே, பின்டக்ஸ் -ஐ, க்ரியேடிவ்-ஆ, யூஸ் பண்ணி,அழகான ஆடைகளா மாற்றலாம்.அல்லது, அற்புதமான டிசைன்களை உருவாக்கலாம். அது ஒவ்வொரு ப்ராஜக்ட்-ஐயும், மினி ஆர்ட் பீஸ்-ஆ, ஆக்கிடும்.பலவகையிலும், உங்களாலே, பின்டக்கிங் பண்ண முடியும்-ங்கறதை சவாலா எடுத்துக்கங்க,அதனுடைய ரிசல்ட்-ஐ என்ஜாய் பண்ற மாதிரி இந்த பயணத்தையும், என்ஜாய் பண்ணுங்க.